செ.வெ.எண்.274/2009/செமதொஅ நாள்: 03.09.2009

**<u>இந்தியாவிலேயே தமிழகம் கல்வி வளர்ச்சியில் சிறந்த மாநிலமாக திகழ ரூ.11 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்து வழங்கியவர் முதல்வர் கலைஞர் - மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் பேச்சு.</u>**

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், படப்பை அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.50.7 இலட்சம் மதிப்பீட்டில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்ட கலையரங்கம், சத்துணவு கூடம், பள்ளி கூடுதல் கட்டடம், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கட்டப்பட்ட புதிய பள்ளிக் கட்டடம், ஊரக உள்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட சத்துணவு கூடம், நியாயவிலைக் கட்டடம், பள்ளி சமையல் கூடம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட நியாய விலைக் கட்டடம், மற்றும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட நூலக கட்டடங்களின் திறப்பு விழா மற்றும் புதிய அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி துவக்க விழா நடைபெற்றது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு புதிய கட்டடங்களை திறந்து வைத்து, புதிய அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி துவக்கி வைத்து 20 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ரூ.6 ஆயிரம் வீதம் உதவித் தொகையினை வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

“ படப்பை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியினை துவக்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்தியாவிலேயே தமிழகத்தை கல்வி வளர்ச்சியில் சிறந்த மாநிலமாக உருவாக்க இந்த ஆண்டு கல்விக்காக ரூ.11 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்து வழங்கியவர் முதல்வர் கலைஞர். ஏழை, எளிய மாணவர்கள் சிறந்த முறையில் கல்வி பயில வேண்டும் என்பதற்காகவே கல்விக் கட்டணம் ரத்து, இலவச சீருடை, இலவச பஸ் பாஸ், இலவச சைக்கிள், இலவச சத்துணவு, சத்துணவில் வாரம் மூன்று முட்டை என மாணவர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறார். 10 ஆண்டுகளுக்கு முன்பு 100 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை இருந்தது. ஆனால் மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆட்சி பொறுப்பேற்ற பின், புதியதாக 50 ஆயிரம் ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஆட்சியில் தொகுப்பூதியத்தில் பணி நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கி பணி நிரந்தரம் செய்தவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆவார். இந்த ஆண்டு புதியதாக 12 ஆயிரம் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர். அதனால் இன்று 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை வந்துள்ளது. தமிழகம் முழுவதும் உள்ள பள்ளிகளில் கட்டடங்களே இல்லை என்ற நிலையை மாற்றிட ரூ.281 கோடி மதிப்பீட்டில் 14 ஆயிரம் வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழகத்தில் கல்வித்துறைக்கு பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வி என இரண்டு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கடந்த காலங்களில் மாணவர்களின் தேர்ச்சி சதவீதம் 35 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை இருந்தது. தற்போது தேர்ச்சி விகிதம் 70 சதவீதத்திற்கு மேல் உள்ளது. வரும் காலங்களில் மாணவ செல்வங்களாகிய நீங்கள் நன்றாக படித்து 100 சதவீதம் தேர்ச்சி பெற முயல வேண்டும். அதற்கு பெற்றோர் ஆசிரியர் கழகமும், ஆசிரிய பெருமக்களும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆட்சி பொறுப்பேற்ற பின் கடந்த 3 ஆண்டுகளில் படப்பை பகுதிக்கு புதிய வழித்தடங்களில் புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. புதியதாக அரசு ஆரம்ப சுகாதார நிலையம் துவக்கப்பட்டுள்ளது. படப்பை ஊராட்சியில் மட்டும் 400 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. வண்டலூர்-வாலாஜாபாத் சாலை நான்கு வழிச் சாலையாகவும், சிங்கபெருமாள் கோவில் - திருப்பெரும்புதூர் சாலை ஆறுவழிச் சாலையாகவும் ரூ.300 கோடியில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. வண்டலூரில் புதியதாக மேம்பாலம் கட்டப்பட்டு வருகிறது. இன்னும் இரண்டு மாத காலத்தில் பணி நிறைவடைந்து திறக்கப்பட உள்ளது. இது போன்று பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் தமிழகம் முழுவதும் நடைபெற்று வருகிறது.” என்று தெரிவித்தார்.

இவ்விழாவில் திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.டி.யசோதா, மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.த.துரைசாமி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திரு.ஆ.மனோகரன் ஆகியோர் முன்னிலையுரையாற்றினர். மாவட்ட கல்வி அலுவலர் திரு.ஆர்.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையுரையாற்றினார். படப்பை ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.பத்மா மாணிக்கம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். முன்னதாக பள்ளி தலைமை ஆசிரியர் திரு.பெ.ஜெயபால் விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். நிறைவாக பெற்றோர் ஆசிரியர் கழக துணைச்செயலாளர் திரு.இ.அந்தோணிராஜ் நன்றி கூறினார். மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் திரு.மு.ராகவன், திருமதி.ரீட்டா செல்வசீமான், ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.கா.செல்வம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள், ஆசிரிய பெருமக்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

வெளியிடுபவர்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.